# Chapter 6
# துணிந்தவர் வெற்றி கொள்வர்

---

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

**கேள்வி** 1.
வகுப்பறை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) வகுப்பு + அரை
ஆ) வகுப்பு + அறை
இ) வகு + அறை
ஈ) வகுப் + அறை
**விடை:**
ஆ) வகுப்பு + அறை

**கேள்வி** 2.
இகழ்ச்சி என்ற சொல் உணர்த்தும் பொருள்
அ) மகிழ்ச்சி
ஆ) மதிப்பு
இ) அவமதிப்பு
ஈ) உயர்வு
**விடை:**
இ) அவமதிப்பு

**கேள்வி** 3.
பெரிய என்ற சொல்லின் எதிர்ச்சொல்
அ) சிறிய
ஆ) நிறைய
இ) அதிகம்
ஈ) எளிய
**விடை:**
அ) சிறிய

**கேள்வி** 4.
வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல்
அ) சாதனை
ஆ) மகிழ்ச்சி

இ) நன்மை
ஈ) தோல்வி
**விடை:**
ஈ) தோல்வி

**கேள்வி** 5.
மண்ணைப்பிளந்து என்ற சொல்லைப் பிரித்து எழுதுக் கிடைப்பது
அ) மண் + பிளந்து
ஆ) மண்ணைப் + பிளந்து
இ) மண்ணை + பிளந்து
ஈ) மன் + பிளந்து
**விடை:**
இ) மண்ணை + பிளந்து

## வினாக்களுக்கு விடையளி

**கேள்வி** 1.
மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன ?
**விடை:**
அறையின் நடுவே ஒரு பெரிய பெட்டி உள்ளது. அறைக்குள் சென்று அந்தப் பெட்டியைத் தூக்கி வருபவரே வெற்றியாளர் என ஆசிரியர் கூறினார்.

**கேள்வி** 2.
மாணவ மாணவிகள் போட்டியில் பங்கேற்காததற்குக் காரணங்கள் யாவை?
**விடை:**
பெட்டி உருவ அளவில் பெரியதாக இருந்தது. எனவே தங்களால் அதைத் தூக்க முடியாது என மாணவ மாணவிகள் நினைத்தனர். எனவே அவர்கள் போட்டியில் பங்கேற்கவில்லை.

**கேள்வி** 3.
கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?
**விடை:**
கவியரசி தான் முயற்சி செய்து பார்க்கலாம் என நினைத்தாள். அவளது முயற்சியே வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

## பாடப் பொருளை வரிசைப்படுத்துவோமா?

**கேள்வி** 1.
இவ்வளவு பெரிய பெட்டியினை நம்மால் தூக்க இயலாக என்றனர் சிலர்.

**விடை:**
ஆசிரியர் ஒரு போட்டியினை அறிவித்தார்.

**கேள்வி** 2.
ஆசிரியரும் மாணவரும் கவியரசியைப் பாராட்டினர்.
**விடை:**
அறையின் நடுவே ஒரு பெட்டி இருந்தது.

**கேள்வி** 3.
தம்மால் முடியும் என்று முயன்றதால் கவியரசி வெற்றி பெற்றாள்.
**விடை:**
இவ்வளவு பெரிய பெட்டியினை நம்மால் தூக்க இயலாக என்றனர் சிலர்.

**கேள்வி** 4.
ஆசிரியர் ஒரு போட்டியினை அறிவித்தார்.
**விடை:**
தம்மால் முடியும் என்று முயன்றதால் கவியரசி வெற்றி பெற்றாள்.

**கேள்வி** 5.
அறையின் நடுவே ஒரு பெட்டி இருந்தது.
**விடை:**
ஆசிரியரும் மாணவரும் கவியரசியைப் பாராட்டினர்.

## பழத்திற்கு உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கலாமா?





எ. கா: 1. ஆசிரியர்
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________
7. ____________
8. ____________
9. ____________
10. ____________


**விடை:**

1. ஆசிரியர்
2. பெயர்
3. போட்டி
4. சிரி
5. பெரிய
6. அரிசி
7. சரி)
8. திரி
9. பெட்டி
10. அதிசயம்

## பொருத்தமான எதிர்ச்சொல் சாவியைக் கொண்டு பூட்டைத் திறப்போமா?




**விடை:**





## இணைந்து செய்வோம்

மாணவர்களுக்கு வேண்டிய குணங்களைக் கொண்ட மீன்களுக்கு மட்டும் வண்ணமிடுக.



**விடை:**




## செயல் திட்டம்



“முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்” என்பது போன்று தன்னம்பிக்கையை வளர்க்கும் ஏதேனும் ஐந்து பொன்மொழிகள் மற்றும் பழமொழிகளை எழுதித் தொகுத்து வருக.

**விடை:**

1. உழைப்பே உயர்வு.
2. முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்.
3. முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை.
4. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
5. தோல்வியே வெற்றிக்கு அடிப்படை.